SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

# ஜனவரி 2017 பரீட்சை - AA3 மட்டம்
**(January 2017 Examination - AA3 Level)**

வினாக்களும் விதந்துரைக்கப்பட்ட விடைகளும்
பாட இலக்கம் **: AA34**

# செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு (PCA)

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வென். முறுத்தெட்டுவெ ஆனந்த நாஹிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05

தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் ஒரு வெளியீடு**

## இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

## AA3 பரீட்சை – ஜனவரி 2017

## (AA34) செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பகுதி - A**

**நான்கு (04) கட்டாய வினாக்கள்**
**(மொத்தம் 20 புள்ளிகள்)**

### வினா 1ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

- பொருளாதாரக் காரணிகள்
    1. வட்டி வீதம்
    2. பணவீக்கம்
    3. வெளிநாட்டு பணமாற்று வீதம்
    4. வேலையின்மை
    5. பொருளாதார அபிவிருத்தி
    6. அரசியல் கொள்கைகள்
    7. வரிக் கொள்கைகள்

- தொழில்நுட்பக் காரணிகள்
    1. தயாரிப்புக் கண்டுபிடிப்பு
    2. தொழிநுட்ப முன்னேற்றங்கள்
    3. உற்பத்திச் செயன்முறையில் விரைவான மாற்றம்.

**(5 புள்ளிகள்)**

## வினா 2ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(A) இமொபைல் (தனியார்) கம்பனி பின்வரும் அக இடர்களினால் பாதிக்கப்பட்டிருக்கலாம்.

1. நடைமுறைகளில் இடர் - கம்பனி நடைமுறைகளில் தோல்வி
2. மோசடி இடர் - ஊழியர் அல்லது வெளியாட்களின் மோசடி செயல்கள்
3. நன்மதிப்பு இடர் - நன்மதிப்பு இழத்தல்.
4. இணக்க அல்லது உடன்பாட்டு இடர் - கம்பனியில் கட்டுப்பாட்டு விதிகளை இணங்கத்தவறுதல்.

**(3 புள்ளிகள்)**

(B) இமொபைல் (தனியார்) கம்பனி இடர்களை குறைக்க பயன்படுத்தும் நுட்பங்கள்.

1. இடர் தவிர்க்க வேண்டும்.
2. இடர் குறைப்பு.
3. இடர் பரிமாற்றம்.
4. இடர் ஏற்பு

**(2 புள்ளிகள்)**

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

## வினா 3ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(A) கணக்காய்வுப் பங்காளர் வழிகாட்டலின் கீழ் கணக்காய்வு அணி அங்கத்தவர்களுடன் தொடர்பாடல் கொள்ள வேண்டிய விடயங்கள் பின்வருமாறு.

1. கணக்காய்வு அணி அங்கத்தவர்களின் பொறுப்புகள்
2. செயற்படுத்தும் வேலைக் குறிக்கோள்
3. நிறுவன வியாபாரத்தின்தன்மை
4. தேவைப்படும் சிறப்புக்கவனம்.
5. கணக்காய்வு அணி அங்கத்தவர்கள் நேர்கொடுக்கும் பிரச்சினைகள்.
6. கணக்காய்விற்கான விரிவான அணுகுமுறை.

**(3 புள்ளிகள்)**

(B)
1. கணக்காய்வு செயற்பாட்டை கண்காணித்தல்.
2. கணக்காய்வுக் குழுவிலுள்ள தனிப்பட்ட அங்கத்தவர்களின் திறனைக் கருத்தில் கொள்ளுதல்.
3. கணக்காய்வு அணுகுமுறையில் உள்ள பிரச்சினைகளை உரைத்தல்.
4. கணக்காய்வு நிர்வாகத்தின் அனுபவமுள்ள உறுப்பினர்கள் ஆலோசனை அல்லது பரிசீலிப்பதற்கு விடயங்களை அடையாளம்காணல்.

**(2 புள்ளிகள்)**

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

## வினா 4ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(A) கட்டுப்பாட்டுச் சூழல் என்பது தரநிலைகள், செயல்முறைகள் மற்றும் அமைப்புகளின் தொகுப்பாகும். இது நிறுவனத்திற்கு அடிப்படை அகக்கட்டுப்பாடுகளை வழங்குகிறது.

மாற்றுப் பதில்கள்

கட்டுப்பாட்டுச் சூழல் என்பது நிறுவனத்தின் கலாச்சாரம் என்று பொருளுடையது மற்றும் அதன் அணுகுமுறை ஆபத்தானதாகும். இடர் விழிப்பணர்வு கலாச்சாரம் அமைப்புத் தலைவரினால் கட்டாயமாக உருவாக்கப்பட்டிருக்கும்.

**(2 புள்ளிகள்)**

(B)
1. கடமைகளைப் பரித்தல்.
2. பௌதீகக் கட்டுப்பாடுகள்
3. அங்கீகாரம் மற்றும் அனுமதி
4. முகாமைத்துவ கட்டுப்பாடுகள்
5. மேற்பார்வைக் கட்டுப்பாடுகள்.
6. அமைப்புக் கட்டுப்பாடுகள்.
7. தனிப்பட்ட கட்டுப்பாடுகள்.

**(3 புள்ளிகள்)**

**(மொத்தம் 05 புள்ளிகள்)**

aat SRI LANKA

**பிரிவு *A* இன் நிறைவு**

பகுதி - **B**

**மூன்று (03) கட்டாய வினாக்கள்.**
**(மொத்தம் 30 புள்ளிகள்)**

## வினா 5ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(A)

1. நேர்மை
2. பாரபட்சமின்மை
3. தொழில்முறை திறமை
4. பாதுகாப்பு காரணம்
5. இரகசியத்தன்மை.
6. தொழில்முறை நடத்தை

**(4 புள்ளிகள்)**

(B) (a) சுயநாட்ட அச்சுறுத்தல் - நிதியியல் அல்லது பிற வட்டி, கணக்காளரின் தீர்ப்பு அல்லது நடத்தையை பாதிக்காது என்ற அச்சுறுத்தல்.

உதாரணம்:

1. உத்தரவாதக்குழு அங்கத்தவருக்கு, உத்தரவாதக்குழு வாடிக்கையாளரிடம் நேரடியான ஆர்வம் காட்டுதல்.
2. ஒரு நிறுவனமானது வாடிக்கையாளரின் மொத்த பணத்தில் தேவையற்றுச் சார்ந்திருத்தல்.
3. உத்தரவாதக்குழு அங்கத்தவர் வாடிக்கையாளருடன் மிகவும் நெருக்கமான வர்த்தக உறவைக் கொண்டிருத்தல்.
4. நிறுவனமானது குறிப்பிடத்தக்க வாடிக்கையாளரை இழப்பதற்குரிய சாத்தியத்தைப்பற்றி அக்கரைப்படல்.

(b) துணைவலிமை அச்சுறுத்தல்.

இவ்வச்சுறுத்தலானது ஒரு கணக்காய்வு நிறுவனம் தனது நிலையை அடுத்தடுத்த குறிக்கோள்கள் சமரசம் அடையும் நிலைக்கு ஊக்குவிக்கும் போது இவ்துணைவலிமை அச்சுறுத்தல் உருவாகின்றது.

உதாரணம்:

1. ஒரு நிறுவனம் கணக்காய்வு வாடிக்கையாளர்களுக்கு பங்குகளை ஊக்குவித்தல்
2. கணக்காய்வாளர் கணக்காய்வு வாடிக்கையாளர் சார்பாக மூன்றாம் தரப்பினருக்கு எதிரான முறன்பாடுகளுக்கு வழக்கறிஞராக செயற்படுதல்.

(c) பரிச்சய அச்சுறுத்தல் - வாடிக்கையாளர் அல்லது தொழிலாளியுடன் நெருங்கிய அல்லது நீண்ட உறவுமுறை மூலம் இவ்வச்சுறுத்தல் ஏற்படும். கணக்காளர் இவர்களுடைய விருப்பங்களுக்கு கூடுதலாக இரக்கம் காட்டல் அல்லது அவர்களின் வேலைகளை ஏற்றுக்கொள்ளுதல்.

உதாரணம்:

1. நிர்வாகக் குழு அங்கத்தவர், பணிப்பாளர் அல்லது வாடிக்கையாளருடன் மிகவும் நெருக்கமான உறவுமுறை உடையவராவார்.
2. நிர்வாகக் குழு அங்கத்தவர் நெருக்கமான உறவுடைய அங்கத்தவர் ஆவார் அவர் வாடிக்கையாளரின் தொழிலாளியாக இருப்பவர், நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயங்களில் நேரடியாக செல்வாக்குச் செலுத்தும் நிலையிலுள்ளவர்.
3. பணிப்பாளர் அல்லது வாடிக்கையாளர் அல்லது தொழிலாளி நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயங்களில் முக்கிய பங்காற்றும் நிலையிலுள்ளவர் அத்துடன் அண்மையில் நிர்வாகப்பங்காளியாக கடமையாற்றுபவர்.

**(6 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 6ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) லேட்டஸ்ட் பெ'ன் (தனியார்) கம்பனியின் மேற்கூறப்பட்ட விடயமானது பின்வருமாறு கணக்காய்வில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இச் சந்தர்ப்பத்தில், இறுதி இருப்பானது கிரயத்தில் மதிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் தேறிய பெறுமதியானது கிரயத்திலும் விட குறைவாகவுள்ளது. எனவே இலங்கை கணக்கீட்டாளர் நியமம் (LKAS) 02- சரக்கிருப்பினை இது பூர்த்தி செய்யவில்லை. LKAS 02- ஆனது இறுதி இருப்பு மதிப்பிடும் போது கிரயம் மற்றும் தேறிய பெறுமதியில் குறைவானது எதுவோ அதனையே பயன்படுத்த வேண்டும் என்கிறது. ஆதலால் LKAS 02 இற்கு இணங்க இறுதியிருப்பின் பெறுமதியை தேறிய பெறுமதிக்கு குறைக்க வேண்டும். இது LKAS 02- ற்கு புறம்பாக உள்ளது. மற்றும் இச்செயற்பாட்டின் பெறுமதி பொருண்மையாகவும் உள்ளது. (50மி -20மி) 30மில்லியன். எனவே முகாமையானது இதற்கான ஏற்பாட்டை நிதிக்கூற்றுகளில் செய்ய தவறும் பட்சத்தில் கணக்காய்வு அறிக்கையானது மாற்றம் (Modified) செய்யப்பட்டு வழங்கப்படும். முகாமையானது LKAS 02- உடன் சரிவர இணங்காத காரணத்தால் மற்றும் வழுமானது பொருண்மைத்தன்மையுடையதாக காணப்பட்டு இருப்பினும் பரவலானதாகும் (pervasive) இல்லாதது இருப்பதால் முனைப்பழியுடனான (Qualified) அபிப்பிராயும் வழங்கப்படும். மாற்றத்துடனான அபிப்பிராயத்திற்கான பந்தியில் தவறாக இருப்பு மதிப்பிடப்ட்ட விடயம் மற்றும் அதன் பொருண்மைத்தன்மை என்பது வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

அபிப்பிராயம் வழங்கப்படும் பந்தியானது முனைப்பழியுடனான "இது தவிர்ந்த" என்ற அடிப்படையில் அமையும். கணக்காய்வாளர் அபிப்பிராயம் வழங்கும் போது மாற்றத்துடனான அபிப்பிராய பந்தியில் கூறப்பட்ட விடயம் தவிர்ந்த ஏனைய அனைத்து விடயங்களிலும் நிதிக்கூற்றுகள் உண்மையான தோற்றப்பாட்டை வெளிப்படுத்துகிறது என்று குறிப்பிடுவர்.

**(4 புள்ளிகள்)**

b) கீழ்வரும் சந்தர்ப்பங்களில் மாற்றப்பட்ட கணக்காய்வு அறிக்கை வழங்கப்படும்.

- o திரட்டப்பட்ட கணக்காய்வு சான்றுகளுக்குகிணங்க நிதிக்கூற்றுக்களானவை பொருண்மை பிறழ்கூற்றுக்களில் இருந்து விடுபட்டிராத சந்தர்ப்பங்களில்.
- o கணக்காய்வாளரால் போதியளவு கணக்காய்வு சான்றுகளை திரட்ட கட்டுப்பாடுகள் காணப்படும் சந்தர்ப்பத்தில்.

கணக்காய்வு அறிக்கையில் ஏற்படும் மாற்றம் கணக்காய்வாளரது அபிப்பிராயத்தில் செல்வாக்கு செலுத்தும்.
உதாரணம் : நிதியாண்டு முடிவதற்கு பின்னரான கணக்காய்வாளரது நியமனமானது அவரால் நிறுவனத்தின் ஆண்டிறுதி சரக்கிருப்பு கணக்கெடுப்பில் பங்குபற்ற முடியாத நிலையை தோற்றுவிக்கும்.

நிறுவனத்தின் நிதிசார் ஏடுகள் அல்லது பதிவுகள் அழிதல்.
கணக்காய்வாளர்கள் கணக்காய்வு அறிக்கையில் ''விடய அழுத்த பந்தியியினை'' உள்ளடக்கி, நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துவோரின் கவனத்தை ஈர்த்து அதில் குறிப்பிடப்பட்ட சில விடயங்கள் கணக்காய்வாளர்களது அனுபவ ரீதியான தீர்மானங்கள் என்பதை தெளிவுபடுத்துவர். விடய அழுத்த பந்தியினை உள்ளடக்கலானது கணக்காய்வு அபிப்பிராயத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது.
உதாரணம் : நிறுவனத்தின் பெயரில் காணப்படுகின்ற சட்ட ஒழுக்க நடவடிக்கையால் ஏற்படக்கூடிய எதிர்கால வெளியீடு.

**(6 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 7ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

1. மூன்று கட்சி உறவுகள்
   - தகவல் நோக்கப் பயனர்.
   - பயிற்சியாளர்.
   - தகவல் வழங்கும் நபர் (பொறுப்பானவர் கட்சி)

2. விடயம் -
   சான்றிதழ் தரப்பட்ட தரவு. இது பொறுப்பான கட்சியினரால் தயாராக்கப்படும். பல படிவங்களை உள்ளடக்கியது.
   - நிதியியல் கூற்று – (வரலாற்று நிதியியல் தகவல்)
   - நிதியியல் தகவல் அல்லாதது (முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள்)
   - செயற்பாடுகள் (அகக் கட்டுப்பாடுகள்)
   - நடத்தைகள் (சட்டம் மற்றும் விதிமுறைகளுக்கு இணக்கம்)

SRI LANKA

3. பொருத்தமான அடிப்படை

ஒரு கருத்தை அடையும் பொருட்டு மதிப்பீடு மற்றும் அளவீட்டிற்கு எதிராக விடயம் மதிப்பீடு செய்யப்படுகிறது.

4. ஆதாரங்கள்

போதுமான பொருத்தமான ஆதாரங்கள் தேவையான அளவு உத்தரவாதமளிப்பிற்கு ஆதரவாகச் சேர்க்கப்பட வேண்டும்.

5. உத்தரவாத அறிக்கை / தீர்மானம்

பயிற்சியாளர் தன்னுடைய தீர்மானத்தை முன்வைத்தல் அல்லது உத்தரவாத அறிக்கையிலுள்ள நோக்கப்பயனரின் கருத்து.

**(10 புள்ளிகள்)**

aat SRI LANKA

**பிரிவு *B* இன் நிறைவு**

**பகுதி - C**

**இரண்டு (02) கட்டாய வினாக்கள்.**
**(மொத்தம் 50 புள்ளிகள்)**

## வினா 8ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(A) (a) சம்பளப்பட்டியல் முறைமையில் காணப்படும் அகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள்.

1. "பஞ் காட்" (Punch card) செயல்முறையினை எந்தவொரு அலுவலகர்களினாலும் மேற்பார்வை செய்வதில்லை.
2. நிறுவன புதிய நியமனங்கள் மனிதவள பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது மற்றும் தொழிலாளர்கள் சம்பளப்பட்டியலில் உள்வாங்குதல் மனிதவள நிர்வாகிகளால் மேற்கொள்ளப்படுகிறது.
3. மேலதிக வேலை நேரக் கொடுப்பனவுகள் சம்பளப்பட்டியலில் கணக்கிடப்படுகிறது.
4. வரவிற்கான கொடுப்பனவுகள் சம்பளப்பட்டியலில் சம்பளப்பட்டியல் எழுத்தாளரால் பதியப்படுகிறது.
5. சம்பளப்பட்டியல் எழுத்தாளரால் தொழிலாளருக்கு பணம் வழங்கி, தொழிலாளரிடமிருந்து பெற்றுக்கொண்டதற்கான ஒப்புக்கொள்ளல் பெறப்படவில்லை.

**(4 புள்ளிகள்)**

SRI LANKA

(b) பரிந்துரைக்கப்படுகிறது.

1. இச்செயல்முறையினை கட்டாயமாக பொறுப்பான அலுவலகரினால் மேற்பார்வை செய்வதனால் மற்றையவருக்கான வரவுப்பதிவினை மேற்கொள்ளுவதைத் தவிர்க்கலாம்.
2. சரியான நியமன படிவம் மனிதவள பிரிவில் இருந்த கிடைத்ததும் புதிய தொழிலாளருக்கான சம்பளப்பட்டியல் சம்பளப்பட்டியல் எழுத்தாளரினால் பதியப்பட வேண்டும்.
3. எல்லா மேலதிக வேலை நேரக் கொடுப்பனவுகள் பொறுப்பான அலுவலரினால் அனுமதியின்பின் கொடுப்பனவிற்கு அனுப்ப வேண்டும்.
4. எழுத்தாளர் தரவுப்பதிவு மேற்கொண்டதன் பின், எல்லாப் பதிவுகளும் இருமுறை பரிசோதிக்க வேண்டும்.
5. சம்பளப்பட்டியல் எழுத்தாளரால் தொழிலாளருக்கு பணம் வழங்கி, கட்டாயமாக தொழிலாளரிடமிருந்து பெற்றுக்கொண்டதற்கான ஒப்புக்கொள்ளல் பெறப்படவேண்டும்.

**(4 புள்ளிகள்)**

(c) சம்பளப்பட்டியல் செயற்பாட்டிலுள்ள பிரதான இடர்கள் பின்வருமாறு:

முறைமையில் “வைரஸ்” தாக்குதல் மற்றும் வேறு தடங்களால் இடர்கள் ஏற்படலாம்.

1. அதிகாரமற்ற பாவனையாளரினால் தாக்கப்படல்.
    - முறைமையின் சீரான செயற்பாடு பாதிக்கும்.
    - வணிக ரீதியான உணர்ச்சி பூர்வமான தகவல்கள் பெறுவதற்கு.
    - “வைரஸ்” மற்றும் வேறு தடங்கலால் இடர்கள் ஏற்படலாம்.

**(2 புள்ளிகள்)**

(d) (i) பொதுக் கட்டுப்பாடுகள்

- கடவுச் சொல் இட்டு பாதுகாத்தல். ஆகையால் வரையறுக்கப்பட்ட அலுவலகர்களே அணுகமுடியும்.
- பௌதீக பாதுகாப்புகளை இடுதல்.
- “வைரஸ்” எதிர்ப்பு மென்பொருட்களை பயன்படுத்தல்.
- காப்புப் பிரதி செய்து வேறு இடத்தில் பாதுகாப்பாக வைத்தல்.
- புதிய மென்பொருளுக்கு, அலுவலகர்களுக்கு பயிற்சி வழங்குதல்.

**(3 புள்ளிகள்)**

(ii)

- முழுமையான உள்ளீட்டு கட்டுப்பாடுகள்
    - கைமுறையால் மற்றும் நிரலாக்கப்பட்ட ஒப்பந்தம்.
    - ஆவண எண்ணிக்கை
- துல்லியமான உள்ளீட்டு கட்டுப்பாடுகள்.
    - தரவு புலங்களைப் பரிசோதித்தல்.
    - இலக்க சரிபார்ப்பு

நியாயத்தனமையான சோதணை

இருப்புச் சோதனை

- அங்கீகாரமான உள்ளீட்டு கட்டுப்பாடுகள்.
    - கைகளினால் பரிசோதித்து தகவல்களை உறுதிசெய்தல்.
    - அங்கீகாரம் வழங்கியவரினால் தரவு உள்வாங்குதல்.
- செயற்பாடுகள் மீதான கட்டுப்பாடுகள்
- செயற்பாட்டின் தொடர்ச்சியை உறுதிப்படுத்தும் கட்டுப்பாடுகள்

**(2 புள்ளிகள்)**

SRI LANKA

B) a) மேலதிக கணக்காய்வு விதிமுறைகள்.

வியாபாரக் கடன்பட்டோர்

1. கடனாளிகளின் உறிப்படுத்தல்.
2. "பொருள் அனுப்பும் குறிப்பு", விலைப்பட்டியல் மற்றும் ஒப்புகையினைப் பரிசோதித்தல்,
3. நேரடி உறுதிப்பாட்டினை பெறல்.

சொத்து ஆலை மற்றும் உபகரணங்கள்

1. "PPE" பௌதீக சரிபார்ப்பு
2. அசல் ஆவணங்களுடன் சொத்துகளின் உரிமையாண்மையைப் பரிசோதித்தல்.
3. தொடர்புடைய அலுவலகத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதா என பரிசோதித்தல்.
4. கணக்கியல் கொள்கைகளை சீரானது மற்றும் நியாயமானது என உறுதிப்படுத்தல்.

வங்கி கடன்

1. சட்ட பூர்வமாக ஒப்பந்தம் செல்லுபடியாதலை சோதணை செய்தல்.
2. வங்கியினால் உறுதிப்படுத்தப்பட்ட வங்கி கடன் மீதி.
3. வங்கி கடன் தீர்வு மற்றும் வட்டி தொகையை நிதி அறிக்கைகளின் ஊடாக பரிசோதித்தல்.

**(6 புள்ளிகள்)**

(b) பகுப்பாய்வு விதிமுறையை இனங்காணல்.

வியாபாரக் கடன்பட்டோர்

| | 2016 | 2015 |
|---|---|---|
| | ரூ | ரூ |
| விற்பனை | 1,005,630 | 700,250 |
| கடனாளிகள் | 209,500 | 116,700 |
| கடந்த வருடத்துடன் ஒப்பிடும் பொது | (92,800 / 116,700) x 100 = 79% | |
| கடன்பட்டோர் சேகரிப்புக் காலம். | 209,500/1,005,630 x 365 | 116,700/700,250 x 365 |
| | 76.04 | 60.83 |
| | **76 நாட்கள்** | **61 நாட்கள்** |

கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் 2015 உடன் ஒப்பிடும் போது கணிசமான அளவு அதிகரித்துள்ளது. கட்டாயமாக இப்பகுதியில் கவனம் செலுத்த வேண்டும். 5 கடனாளிகளில் ஒருவர் மட்டும் தவறான கடனாளியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.



aat SRI LANKA

**மொத்த இலாபம்**

| | 2016 | 2015 |
|---|---|---|
| | ரூ | ரூ |
| விற்பனை | 1,005,630 | 700,250 |
| மொத்த இலாபம் | 452,630 | 343,130 |
| மொத்த இலாபம் எல்லை | 452,630 / 1,005,630 x 100 | 343,130 / 700,250 x 100 |
| | **45%** | **49%** |

மொத்த இலாபம் எல்லை 2015 உடன் ஒப்பிடும் போது 2016 இல் குறைவடைந்துள்ளது. இருந்தபோதிலும் விற்பனை மதிப்பு அதிகரித்துள்ளது. ஆனால் விற்பனைச் செலவானது விற்பனையிலும் பார்க்க அதிகரித்துள்ளது.

**(2 புள்ளிகள்)**

(c) உறுதிப்பாடுகள்

1. இருப்பு
2. உரிமைகள் மற்றும் கடமைகள்
3. பூர்த்தி
4. மதிப்பீடு மற்றும் ஒதுக்கீடு

**(2 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

## வினா 9ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(A) (a) கணக்காய்வு இடர் ஆனது நிதியறிக்கையில் உள்ள பொருட்கள் தவறாக இருக்கும் போது கணக்காய்வாளர்கள் பொருத்தமற்ற கணக்காய்வு கருத்தினைக் வெளிப்படுத்துவதாகும்.

கணக்காய்வாளர்களால் அத்தகைய தவறுகளை கூற்றுக்களில் இருந்து கண்டுபிடிக்க முடியாது.

**(02 புள்ளிகள்)**

(b) 1. தொழில்துறை, ஒழுங்குமுறை மற்றும் பிற வெளிப்புற காரணிகள், பொருந்தும் நிதி அறிக்கை கட்டமைப்பை உள்ளடக்கியது.

2. நிறுவன இயல்பு மற்றும் அதன் கணக்கியல் கொள்கைகள்.
3. நோக்கங்கள் மற்றும் உத்திகள் மற்றும் வியாபார இடர்களுடன் தொடர்புபட்டது.
4. நிறுவனத்தின் நிதி செயல்திறன் அளவீடு மற்றும் மதிப்பாய்வு.
5. அகக் கட்டுப்பாடுகள்.

**(03 புள்ளிகள்)**



SRI LANKA

(c) 1. பண்ணையாளர்களிடமிருந்து பாலைப் சேகரித்தல் மற்றும் பண்ணையாளர்களுக்கு கொடுப்பனவு செய்தல் ஆகிய இரண்டும் ஒரு நபரினால் (கணக்கு நிர்வாகியினால்) மேற்கொள்ளப்படுகிறது. – மோசடி ஆபத்தாக இருக்கலாம்.

2. நடைபெறும் ஆண்டில் 3 முறை கணக்காளர் மாற்றம் மற்றும் தற்போதுள்ள கணக்காளருக்கு தொழில்முறை தகுதியற்றவர். – நிறுவனம் 3 துணை நிறுவனங்களைக் கொண்டிருப்பதால் பரிமாற்றங்களைச் செய்வதற்கு தொழில்துறை அறிவு தேவை. ஆகையால் நிதிக்கூற்றில் குறைபாடு ஏற்படலாம்.

3. "ADP" nபாருளின் தேவையானது புதிய போட்டியாளரின் பொருள் "Treemo" வருகையால் குறைந்துள்ளது. "Treemo" ஆனது அதிக முதலீட்டினைப் விளம்பரத்திலும் மற்றும் ஊக்குவித்தலுக்கும் மற்றும் குறிப்பிட்ட அளவு சந்தையையும் கைப்பற்றியுள்ளது.

4. உறவுத்தரப்பினரிடம் குறிப்பிடத்தக்க பரிவர்த்தனை உள்ளது.

5. பல குறிப்பிடத்தக்க தொகை ஒரு வழக்கறிஞருக்கு வழங்கப்பட்டது. இவை அசாதாரண பரிவர்த்தனை ஆகும்.

**(8 புள்ளிகள்)**

(d) 1. நிறுவன அமைப்பின் சட்டபூர்வநிலை

2. முக்கிய சட்டபூர்வ ஆவணங்கள்.

3. தொழில்துறை, ஒழுங்குமுறை விபரங்கள் நிறுவனத்தில் செயல்படும்.

4. சங்கத்தில் இணைப்பிற்கான சான்றிதழ்.

5. சட்ட ரீதியான தேவைகள் நிறுவனத்தால் தொகுக்கப்பட வேண்டும்.

6. நிறுவனத்தின் தகவல் முறைமை மற்றும் அகக் கட்டுப்பாடுகள் முறைமை ஆவணமாக்கம்.

7. புத்தகங்கள் மற்றும் பதிவுகளின் முழுமையான பட்டியல் நிறுவனத்தினால் பராமரிக்கப்படுகிறது.

8. முக்கிய ஒப்பந்தம் வருடத்திற்கு வருடம் பிரதிகளும் மற்றும் மேலதிக பிரதிகள் எடுத்தல்.

9. முக்கிய நிரந்தர சொத்துக்களின் தகவல்கள்.

**(2 புள்ளிகள்)**

(B) (a) 1. நிபுணரின் தொழில்துறை திறனை மதிப்பீடு செய்தல்.

2. மதிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப்பட்ட பெறுமதியின் நியாயத்தன்மை மற்றும் சம்பந்தத்தைப் பரிசோதித்தல்.

3. மதிப்பீடானது குறிப்பிடத்தக்க அனுமானத்தில் ஈட்டப்பட்டிருப்பின் கணக்காய்வாளர் அனுமானத்தின் நியாயத்தன்மை மற்றும் சம்பந்தத்தை சரிபார்க்கவேண்டும்.

4. மதிப்பீட்டாளரின் வேலையானது மூலத்தரவைப் பயன்படுத்தியிருப்பின், அவ்மூலத்தரவின் சம்பந்தம், முழுமைத்தன்மை மற்றும் துல்லியத்தை சரிபார்க்க வேண்டும்.

**(4 புள்ளிகள்)**

(b) முகாமையிடமிருந்து எழுத்து மூலமான பிரதிநிதித்துவம்.

எழுத்த மூலமான பிரதிநிதித்துவம் என்பது நிர்வாகத்தினால் கணக்காய்வாளருக்கு கணக்காய்வு சம்பந்தப்பட்ட அல்லது கணக்காய்வ ஆதாரத்திற்கு ஒத்தழைப்பு வழங்குவதை உறுதிப்படுத்தும் ஒரு கூற்றாகும்.

**(2 புள்ளிகள்)**

(c) எழுத்து மூலமான பிரதிநிதித்துவமானது வாய்மூலமான பிரதிநிதித்துவத்தை விட நம்பகமானது ஏனெனில் வாய்மூலமான பிரதிநிதித்துவம் திரும்ப பெற்றுக்கொள்ள முடியும். எப்படியாயினும் எழுத்து மூலமான பிரதிநிதித்துவமானது கணக்காய்விற்குரிய ஒரு ஆதாரமாகும். ஆயினும் அதற்குரிய வரையறைகள் உண்டு. இவை உள்ளக மூலங்களிலிருந்து பெறப்படுகிறது அவை கணக்காய்விற்கு போதுமான ஆதாரத்தை வழங்குவதில்லை. ஆகவே மூன்றாம் தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் ஆதாரமானது நிறுவனத்தினுள் இருந்து கிடைக்கப்பெறும் ஆதாரத்தைவிட வலிமையானது.

**(4 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

aat SRI LANKA

**பிரிவு *C* இன் நிறைவு**

## *Notice :*

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers".

The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2017 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*
*All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*